# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC No.176/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : **சதாசிவம்** | Calling | : |
| Father's Name | : **சுப்பிரமணி** | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 26th மார்ச் 2026.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பெருந்துறை போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2023 ம் தேதி அரச்சலூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்த மோகன் த/பெ. மாரிமுத்து என்பவரது RTA இன்டிமேசனின் பேரில் அங்கு சென்று AR மற்றும் இன்டிமேசனை பெற்று அவசர சிகிக்சை பிரிவில் இருந்த மோகன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றும், நிலையம் வந்து 16.30 மணிக்கு நிலைய குற்ற எண். 67/2023 சட்டபிரிவுகள் 279, 337 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தும் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகாரை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2 ஈரோடு அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்றொரு நகலை சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. வழக்கின் புலன் விசாரணைக்காக வழக்குகோப்பினை எடுத்து கொண்டு அன்றைய தினம் மாலை 17.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட சாட்சிகள் தேவராஜ் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரை படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** அன்றே சாட்சிகள் சிவகாமி, செங்கோடன், வேலுச்சாமி, சசிக்குமார், கிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதி மோகன்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.26 17:23:16 +0530

மேல்சிகிச்சைக்காக ஈரோடு காவேரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவர் 09.04.2023 ம் தேதி அதிகாலை 3.24 மணிக்கு சிகிச்சை பலனின்றி கிடைத்த இறப்பு இன்டிமேசன் படி சட்டபிரிவினை 279, 337 இதச பிரிவில் இருந்து 279, 337, 304(A) இதச பிரிவாக சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.2 ஈரோடு அவர்களுக்கு அனுப்பியும், வழக்கு கோப்பினை காவல்ஆய்வாளர் அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.</u>**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.26 17:23:21 +0530